

# நீர் மிதக்கும் கண்கள்

பெருமாள்முருகன்

63131

# பெருமாள்முருகன் கவிதைகள்
# ஒரு பார்வை

வாழ்வனுபவத்தின் பதிவுகள் நம் பிரக்ஞைக்குள் ஒவ்வொரு கணமும் நுழையும்போது நம் ஆழத்திலிருந்து சில பிம்பங்கள் எழுந்து அவற்றை எதிர்கொள்கின்றன. இது எல்லோருக்கும் எல்லா நேரங்களிலும் நிகழும் ஒரு பரிவர்த்தனை. அது அந்தப் பதிவுகளுக்குப் பொருளும் அழகும் சேர்த்து அனுபவமாக்குகிறது. அதற்கு முன்னதான புலனுணர்வின் பதிவுகள் பொருளுக்கு முந்தையவை. அப்படியென்றால் ஒரு சராசரி மனிதனுக்கும் கவிஞனுக்கும் இடையில் இந்த முறைபாட்டில் என்ன வேறுபாடு இருக்கிறது?

கவிமனத்தில் தோன்றும் பிம்பங்களில் அழகுணர்ச்சி கூடுதலாக இருக்கிறதா? அதுமட்டும்தானா? கவனித்துப் பார்த்தால் கவி மனத்திலிருந்து எழும் பிம்பங்கள் சராசரி மனத்தைவிட இன்னும் ஆழத்திலிருந்து வருகின்றன என்று சொல்லலாம். சராசரி மனம் பொதுவாகத் தன் காலம் உருவாக்கிய பிம்பங்களைக் கடந்து செல்வதில்லை. ஆனால் கவிமனத்தில் சமூகக் கூறுகள் உருவாக்கிய மேல்மன அமைப்பில் இறுக்கம் சற்றுக் குறைவாக இருப்பதால், சில திறந்த வெளிகள் இருப்பதால், தன் தனிமனத்தைக் கடந்த, தன் காலத்தைக் கடந்த ஆழ்தளங்களிலிருந்து பிம்பங்கள் எழுவதற்கு அது இடம் கொடுக்கிறது.

இந்த முறைபாடு வெறும் இயந்திரகதியானதல்ல.
மனத்தின் அமைப்பையும், பார்வையையும், அதன்
காரணமாக அனுபவத்தையும் மாற்றி அமைக்கக்
கூடிய வல்லமை கொண்டது அது.

அனுபவத்தின் தோற்றுவாய் ஆழ்தளங்களையும்
கடந்த தனியொரு பரிமாணமாக இருக்கிறது. அங்கு
தோன்றும் அனுபவம் நாம் உள்ளடக்கம் என்று
அடையாளம் காணும் விஷயம் ஏதுமில்லாமல்தான்
எழுச்சி கொள்கிறது. அங்கிருந்து ஆழ்தளங்களைக்
கடந்து, பொருள் சேர்த்துக்கொண்டு, அழகும் அமைப்
பும் கூடி, வெளியே மேல்மனத்தில் சொல்லேற்று
கால – வெளிப் பரிமாணத்தில் அனுபவமாக வெளி
வருகிறது. ஒரு அனுபவம் கால – வெளிச் சட்டகத்தை
வந்தடைந்த பிறகே அதை ஒரு சராசரி மனிதமனம்
அறிந்துகொள்கிறது. ஆனால் அந்தக் கட்டத்தில்
அனுபவம் தன் ஆழமிழந்து, பல பொருள்களைப்
பிரதிபலிக்கக்கூடிய தன்மையை இழந்து, ஆழமற்ற
மேல்மனத்தின் குறுகிய அமைப்புக்குள் வந்து சிக்கிக்
கொள்கிறது.

ஆனால் இந்த முறைபாட்டில் எந்தக் கட்டத்தி லும் ஒருவன் தோற்றுவாயை நோக்கிச் சென்று, வழியிலேயே அனுபவத்தை அடையாளம் கண்டு கொள்ள முடியும். எந்தக் கட்டத்தில் அவன் அதை அடையாளம் கண்டுகொள்கிறான் என்பது அந்தந்தக் கவிஞனைப் பொறுத்து இருக்கிறது. அந்தக் கவிஞ னின் உணர்வு நுட்பம் எவ்வளவு ஆழங்களுக்குச் செல்லக் கூடியது என்பதைப் பொறுத்தது அது.

அனுபவம் தன் உள்ளடக்கமற்ற தோற்றுவாயி லிருந்து எழுச்சிகொண்டு வரும்போது பல தளங்களை யும் நிலைகளையும் கடந்து வருகிறது. தன் உணர்வு நுட்பத்துக்கு ஏற்ப ஒரு கவிஞன் – கலைஞன் – அதை வழியிலேயே ஒரு தளத்தில், ஒரு நிலையில், எதிர் கொள்ள முடியும். அவன் அதை எதிர்கொள்ளும் ஆழத்துக்கு ஏற்ப அதன் வெளிப்பாட்டுத் தன்மை நிர்ணயமாகிறது. வாசகனின் மனத்தில் கவிதை ஏற்படுத்தக்கூடிய பாதிப்பு எந்த ஆழத்தில் நிகழ முடியும் என்பதையும் இதுதான் பெருமளவுக்கு முடிவு செய்கிறது.

ஒருவிதத்தில் சொல்லப் போனால் கவிஞன் கால –வெளி அனுபவத்துக்கு முந்தைய கணத்தில்



தான் வாழ்கிறான். நம் பிரக்ஞையில் அறிவின் அடைசல் இல்லாத ஒரு வெற்றிடம் இருக்கிறது. அங்குதான் ஒரு அசலான மனிதன் வாழ்கிறான் என்று சொல்லலாம். ஆழ்தளங்கள் கொண்டுவரும் உண்மை ஊறிய பிம்பங்களை மேல்மனம் பிழிந் தெடுத்து வெறும் சக்கையாக ஆக்கிவிடுவதற்கு முன் னால் அதை அவன் ஏற்றுக்கொண்டு ருசிக்கிறான்.

அறிவின் அடிப்படையில் ஒரு அனுபவத்தின் பொருள் என்ன என்பது ஒரு கவிஞனின் அக்கறை யாக எப்போதும் இருப்பதில்லை. அது கொண்டு வரும் செய்திபற்றிக்கூட அவனுக்கு அக்கறை இருப்ப தாகச் சொல்லிவிட முடியாது. அதன் மதிப்பு அதற் குள்ளேயே இருப்பதை அவன் தன் ஆழத்தில் அறி கிறான். வானத்திலிருந்து விழும் அதிசயப் பொரு ளென அதை அவன் ஏற்றுக்கொள்கிறான். அதை வைத்துக்கொண்டு, திருப்பித்திருப்பிப் பார்த்து, தொடர்ந்து அதிசயப்பட்டுக்கொண்டு இருக்கிறான். வாழ்க்கைக்கு அதிசயத்தையும் ஆச்சரியத்தையும் அது அவனுக்குக் கொடுத்துக் கொண்டே இருக்கிறது.

இவ்வாறு ஆழங்களுக்குச் செல்வது என்பது படிப்பறிவைப் பொறுத்த விஷயமல்ல. உள்ளுணர் வின் நுட்பம் படிப்பறிவினால் வளர்ச்சி கொள்வ தில்லை. ஆனால் நுட்பமான உள்ளுணர்வு அறிந்து கொள்ளும் விஷயங்களை வெளிப்படுத்துவதில் படிப் பறிவு நிச்சயம் துணை செய்கிறது.

மேல்மனம், அதன் அமைப்பு, அறிவு, உள்ளடக் கம் எல்லாம் அந்தந்தக் கவிஞனைப் பொறுத்துத் தனித்துவம் வாய்ந்ததாக இருக்கிறது. கவிதை படிம மேற்று மொழியில் வெளிப்படும்போது எவ்வகை யான மொழியுருவத்தைக் கொள்கிறது என்பதை அதுதான் நிர்ணயிக்கிறது. சொற்களின் கையாளல் கவிஞனின் மொழிப்புலமை சார்ந்ததாக இருந்த போதிலும், சொல் தேர்வை நிர்ணயிப்பது வெறும் மொழிப்புலமை மட்டுமல்ல. அனுபவத்தின் பாதை யில் கவிஞன் அதை எங்கு எதிர்கொள்கிறான் என்பது சொல் தேர்வை நனவுமனத்தின் துணையின் றியே நிச்சயித்துவிடுகிறது. இதையெல்லாம் ஒரு கவிஞன் அறிவுபூர்வமாக அறிந்துகொள்ள வேண்டிய அவசியம் இல்லவே இல்லை. அறிவு சார்ந்த அவன் மேல்மனம் அறியாமலேயே இது நடக்கிறது. அதனால்

தான் மேல்மனத் தூண்டுதலால் மட்டும் வெளிப்படும் கவிதைகள் ஆழமின்றி, வாசகனின் மேல்மனத்தைத் தாண்டி எந்த விளைவுகளையும் ஏற்படுத்துவதில்லை.

கவிமனத்தின் அகவளர்ச்சி சார்ந்த முறைபாடுகளை வெளிக்கொணர்வதில் கவிதை பெரும் பங்கை வகிக்கிறது. அந்த ஆழ்மன முறைபாடுகள் அருமையான கவிதைகளை வெளிப்படுத்துவதோடு மட்டுமல்லாமல் வாசக மனத்தின் அகவளர்ச்சியிலும் தன்னளவில் பங்குகொள்கின்றன. தன் அகவளர்ச்சியின் முக்கியமானதொரு கட்டத்தில் இருக்கும் ஒரு வாசகனின் பிரக்ஞையைக் கவிதை ஒருகணத்தில் தளம் மாற்றிவிடக்கூடிய வல்லமை கொண்டிருக்கிறது.

கவிஞனின் ஆழ்பிரக்ஞையில் ஏற்பட்டுக்கொண்டிருக்கும் அகமாற்றத்தைக் கவிதை அவனறியாமலேயே பிரதிபலிக்கக் கூடியது. மென்னுணர்வு வாய்ந்த ஒரு கவிமனம் அல்லது வாசக மனம் தன் ஆழ்தளங்களின் அசைவுகளைக் காட்டும் ஒரு நிலைக்கண்ணாடியாகக் கவிதையைப் பார்க்கமுடியும். ஆனால் இதற்கு மேல்மனத்தின் ஆதிக்கத்திலிருந்து பெருமளவுக்குப் பிரக்ஞை விடுபட்டிருக்க வேண்டியது அவசியம்.

கவிதை மேல்மனத்தின் செயல்பாடெனக் கருதிக்கொண்டிருக்கும்வரைக்கும் கவிதையின் இயக்கமுறைபாட்டில் பங்கு கொள்வது என்பது சாத்தியமில்லாதது. அசலான கவிதை இம்மாதிரியான மனங்களிலிருந்து வெளிப்படுவதும் அசாத்தியம். இப்படிச் சொல்வதனால் கவிதை பிரக்ஞையின் ஆழ் தளங்களைப் பற்றிய விஷயங்களைத் தன் பாடுபொருளாகக் கொண்டிருக்க வேண்டும் என்று சிறிதும் அவசியம் இல்லை.

காட்சியும் தன்னுணர்வும் சந்திக்கும் அகப்புள்ளியில் ஏற்படும் பரிவர்த்தனையின் வெளிப்பாடாகவே கவிதை எப்போதும் இருக்கிறது. நதியின் ஓட்டமும் படகின் தன்மையும்தான் பயணத்தின் பாதையை நிர்ணயிக்கின்றன. மேல் மனம் அவ்வகையான பயணத்தின் போக்கை முழுவதுமாக நிர்ணயம் செய்வதில்லை. அது முடியவும் முடியாது. ஆனால் நதியின் போக்கைக் கணக்கில் கொண்டு பயணத்தின் தன்மையை, திசையை ஓரளவுக்கு வழிப்படுத்துவது மட்டுமே மேல்மனத்தின் சாத்திய எல்லை. ஆனால் அதற்கும் மிகுந்த சாகசமும் ஆற்றலும் தேவை என்பதை மறுத்துவிட முடியாது. எழுதப்பட்ட கவிதையின் அமைப்பு, அதில் வெளிப்படும் பிம்பங்கள், படிமங்கள், சொல்தேர்வு, ஓசைநயம் எல்லாவற்றையும் கவிஞனின் தனிமனம், அவரது வாழ்க்கை அனுபவம், மொழிப் புலமை, உணர்வு நுட்பம் அனைத்தும் சேர்ந்து முடிவு செய்கின்றன.

இப்போது பெருமாள்முருகனின் கவிதைகளைப் பார்ப்போம். அவரது முதல் தொகுதியிலிருந்து இரண்டாவது தொகுதி வேறுபட்டிருந்தது. பார்வையில் அண்மையும் நுட்பமும் கூடியிருந்தன. இப்போது இந்த மூன்றாவது தொகுதியில் அவரது ஆளுமையின் முதிர்ச்சியும் ஆழமும் தெளிவாக வெளிப்படுகின்றன. அவரது கவிதை உலகத்தின் பல அம்சங்கள் மாறியிருக்கின்றன. புதிய அம்சங்கள் சேர்ந்திருக்கின்றன.

முதல் இரண்டு தொகுதிகளில் இருந்த எளிமையையும் நேரடித் தன்மையையும் இந்தத் தொகுதியிலும் காணமுடிகிறது. என்றாலும் இவை முன்பைவிட இன்னும் ஆழமான தளங்களிலும் இயங்குவதைப் பல கவிதைகள் காட்டுகின்றன.

வானினின்றும் தப்பிவந்த மழை
அடைக்கலம் கேட்டு
என் வீட்டுக் கதவை
இரவெல்லாம் விடாமல்
தட்டிக்கொண்டே இருக்கிறது
காதுக்குள் இறங்கி உடம்பெங்கும்
ஓடுகிறது அவ்வோசை
தாழ்ப்பாள் திறந்து உள்ளே அழைத்து
மழையின் துக்கத்தைக் கேட்டு
ஆறுதல்படுத்தலாம்
மழையிடம் என் கதையைக் கூறியும்
ஆசுவாசப்படலாம்
எழ மனமின்றி
கதவு தட்டப்படும் ஓசையில் லயித்துக் கிடக்கிறேன்
நீளும் இரவில்
கதவு உடைபடும் கணம் வரட்டும் என்று.

மனவியல் ரீதியான வாசிப்பில் இந்தக் கவிதை
பல ஆழ்மனத் தளங்களுக்கு வாசகனை இட்டுச்
செல்லக்கூடிய அம்சங்களைத் தனக்குள் கொண்
டிருக்கிறது. கதவைத் தட்டும் மழை என்பது என்ன,
மழையின் துக்கம் என்ன, கவிஞனின் கதை என்ன,
ஏன் கவிஞன் எழ மனமின்றி அதுவாகக் கதவை
உடைத்துக்கொண்டு வரட்டும் என்று காத்திருக்
கிறான் என்ற கேள்விகள் பல ஆழ்மனத்தளங்கள்
பற்றிய விசாரணையில் நம்மை கொண்டுபோய்ச்
சேர்த்துவிடும் இயல்பைக் கொண்டிருக்கின்றன.
ஒவ்வொரு கேள்வியும் ஒரு கதவைத் திறந்துவிடும்
வல்லமை கொண்டிருக்கிறது.

ஆழமான விஷயங்களைக் குறித்த கவிதைகள்
தன்னளவில் எளிமையுடன் இருப்பது அவசியம்.
இது பொதுவாக கவிஞனின் தெளிவு சார்ந்து இருக்
கிறது. தனக்குள் தெளிவில்லாமல் ஆழமான விஷயங்
கள் கவிதையில் பேசப்படும்போது அடிப்படையி
லேயே குழப்பமான ஒரு வெளிப்பாட்டைத்தான்
நாம் காணமுடியும். இந்தக் கவிதையில் எந்தக்
குழப்பமும் இல்லை. எவ்வளவு ஆழத்துக்குக் கவிதைக்
குள் செல்ல முடியும் என்பது வாசகனின் அறிவுக்
கூர்மையையும் உணர்வு நுட்பத்தையும் பொறுத்துத்
தான் இருக்கிறது.

'விதைப்பானை' என்னும் கவிதை. இரவல்
கேட்டவர்களுக்குக்கூடக் கொடுக்காமல்,

'மழைப்பருவங்களில் பூஞ்சை அண்டாமல்
பனிப்பருவங்களில் பூச்சி புழுக்கள் துளைக்காமல்'
பத்திரப்படுத்தி, 'இப்போது அள்ளி வீசப்படும் மணிகள்'

பற்றி

'தூற்றும் காற்றெதிர்த்து நிற்கும் வலு கிடைக்குமோ
பசியோடு இருக்கும் பறவைகளின்
வாயில் சிக்கிவிடுமோ
வெப்பத் தகிப்பில் கருகிப் பதராகுமோ'

என்ற கவலை, பதற்றம்.

'காலிப்பானையை மூலையில்
கவிழ்த்து வைக்கிறேன்
அறுவடை நாளின்
கனவுகளோடு.'



விதைகள் எதைக் குறிக்கின்றன? பிரபஞ்ச ஆக்கத்தில்
தன் செயல்பாட்டுப் பங்களிப்பு மூலமாக நிகழக்
கூடிய எந்த விதமான ஒரு செயலையும் 'அள்ளி
வீசப்படும் மணிகள்' என்னும் வரி குறிக்க முடியும்.
தன் குழந்தைகள், தன் கவிதைகள், தான் வரைந்த
சித்திரங்கள், ஒரு பள்ளி ஆசிரியனுக்குத் தன்னிடம்
கல்வி பயின்று வெளியில் செல்லும் மாணவக்
குழந்தைகள் என இவை போன்ற எதையும் இந்த
'மணிகள்' குறிக்கக் கூடும். இந்தப் பின்னணியில்
வாசிக்கும்போது இந்தக் கவிதை பல பொருள்தளங்
களைத் திறந்துவிடுகிறது, வாசகன் நுழைந்து பார்க்க.

மென்னுணர்வுகள் தம்மை வெளிப்படுத்திக்
கொள்ளத் தேர்ந்தெடுக்கும் சித்திரங்கள், அவை
தம்மை அமைத்துக் கொள்ளும் பாங்கு, வாசக
மனத்தைச் சரியான இடங்களில் தொட்டு எழுப்பும்
நயம் அனைத்தும் கூடி நிற்கிறது இந்தக் கவிதை.

காணும் பொருள்கள் எல்லாம் கல்லால் ஆகி
யிருக்கின்றன; சுவர்க்கற்கள், திண்ணைகள், பலகைக்
கல் படுக்கைகள், பாலங்கள், அடுப்புகள், கோபுரங்
கள், கல்தொட்டி. அனைவரும் கல்லில் தெரியும்
உருவங்களை அடையாளம் கண்டு அவற்றைப் பயன்
பாட்டுப் பொருள்களாகப் பார்க்கும் நேரத்தில்
கவிஞனின் மனம் தேடுவது,

'கவிழ்ந்திருக்கும் அதன் உட்குழிவில்
புதைந்து கிடக்கும்
ஆதி ரகசியம்.'

'ஊற்றைக் கண்டடைதல்' என்னும் கவிதையில்
சிரிப்பு ஒரு ஊற்றென, பின் ஓடையென, நதியென,
அருவியென, கடைசியில் பேராறென உருக்கொண்டு,
ஒவ்வொரு நிலையிலும் அந்நிலைக்கேற்றவாறு அதனு
டன் கவிஞர் கொள்ளும் உறவு, நீர்மையின் பன்முகங்
களையும் அவை குறிக்கும் பல தளங்களையும் கவிதை
யில் பிரித்துக் காட்டுகின்றன.

இந்தத் தொகுப்பில் குழந்தை பற்றி வந்துள்ள
கவிதைகள் மிகவும் முக்கியமானவை. நம் உலகம்
பற்றிய இலக்கணங்களைக் கணக்கில் கொள்ளாமல்,
அவற்றினால் கட்டுப்படாமல், முழுச் சுதந்திரத்து
டன் தன் பிரத்தியேகமான உலகத்தையும் அந்த
உலகின் விதிகளையும் சிருஷ்டித்துக்கொள்ளும்

குழந்தையின் மனத்தின் அற்புதம் இக்கவிதைகளில் மிகுந்த ஆழத்தோடு வெளியாகியிருக்கிறது. 'சிருஷ்டி', 'குழந்தைகளைத் தண்டித்தல்', 'அப்போதிருந்து' போன்ற கவிதைகள் இதற்கு எடுத்துக்காட்டு.

'பொம்மைகளை
உடைத்தால் வாங்கித் தரமாட்டேன் என்றேன்
பொம்மைகள்
உடைந்தால் வேறொன்றாகிக்கொள்ளும் என்றான்

பொம்மைகள்
பதிலுக்குப் பதில் பேசுமா என்றேன்
பொம்மைகள்
அப்படித்தான் பேசும் என்றான்

பொம்மைகள்
அப்படிப் பேசினால் அடிப்பேன் உதைப்பேன்
என்றேன்
பொம்மைகளும்
அடிக்கும் உதைக்கும் என்றான்

அப்போதிருந்துதான்
எல்லாப் பொம்மைகளின் கண்களும்
என்னையே உற்றுப்பார்க்கத் தொடங்கின.'

குழந்தையின் பார்வையில் பொம்மைகளுக்குப் பிரக்ஞை இருக்கிறது. குழந்தை தன் பிரக்ஞையைத் தயக்கமின்றிப் பொம்மைகளுக்குக் கொடுத்த 'சிருஷ்டி' நிகழ்த்திய அற்புதம் அது. தகப்பனின் பார்வையில் இந்த அற்புதம் நிகழவில்லை. பொம்மைகளைப் பொருள்களாக மட்டுமே பார்க்கப் பயிற்றுவிக்கப் பட்ட மனம் அது. குழந்தை தகப்பனுக்கு சிருஷ்டி ரகசியத்தைக் கற்றுக்கொடுக்கும் ஜாலத்தை இந்தக் கவிதை நிகழ்த்துகிறது. இனி தகப்பனுக்குப் பொம்மை களை – உலகத்தை – வெறும் பொருள்களாகப் பாவிக் கும் மனப்பாதுகாப்பு இல்லாமல் போய்விட்டது. அவன் பிரக்ஞைபூர்வமான உலகத்தை ஒவ்வொரு கணமும் இனி எதிர்கொண்டாக வேண்டும்!

குழந்தைமனம் பற்றிச் சொல்லிவிட்ட கவிஞர், மறுபுறம் கடந்துவிட்ட தலைமுறையின் மனப்பாங்கு பற்றி 'அப்பாவின் வேலி'யில் வெளிச்சம் போட்டுக் காட்டுகிறார்.



'வேலியின் அவசியம்
வேலியின் பாதுகாப்பு
வேலிப் பராமரிப்பு
என்பன பற்றியே எப்போதும் என்னுடன் பேசுவார்'

வாழ்க்கையின் சந்தர்ப்பங்களை இயல்பாக ஏற்றுக் கொள்ளும் இயல்பு, உறவில் தன் சுயத்தைப் பின்தள்ளிக் கொண்டுவிடும் மனப்பாங்கு, அக்கண அனுபவத்தை எதிர் கொண்டு சுலபமாகக் கடந்து விடும் எளிமை, இவை இக் கவிதைகளில் தெளிவாக வெளிப்பட்டிருக்கின்றன.

இவருடைய மனம் விரிந்திருக்கிறது. புதிய தளங் கள் சேர்ந்திருக்கின்றன. அனைத்துத் தளங்களும் மேலும் ஒருங்கிணைந்துகொண்டிருக்கின்றன. பார்வை நுட்பமும் கூர்மையும் சேர்ந்து வளப்பட்டிருக்கிறது.

பெருமாள்முருகனின் கவிதைப் பயணத்தில் இந்தத் தொகுப்பு முக்கியமான ஒரு கட்டம் என்பதை இக்கவிதைகள் தெளிவாகச் சொல்கின்றன.

ஆனந்த்

## எனது வீடு

எல்லோரையும் அழைக்கிறேன்
எனது வீட்டிற்கு
நீங்கள் பார்க்கலாம்
சிலசமயம் கீற்று நுனிகளில் தொங்கும்
எனது வீடு
சிலசமயம் அடர் இலைகளின் நடுவில்
மறைந்து கிடக்கும்
பட்டுப்போன மரங்களைப் பார்க்காமல்
கடந்து விடாதீர்கள்
சிலசமயம் அதன் பொந்துகளாகும்
எனது வீடு
தானியக்கதிர் செழித்த தட்டைத் தோகைகளில்
சிறுத்துக் கிடக்கும்
கூட்டிய கற்களுக்கிடையே உற்றுப் பாருங்கள்
மண்ணிலும் எனது வீடு
எளிய பின்னலால் ஆனது
உள்ளே நுழையும்
நீங்கள்
வீட்டைச் சுற்றிலும்
வீட்டிற்குள்ளும் கண்ணோட்டிவிட்டு
அதிருப்திப் பெருமூச்சோடு திரும்பிச் செல்கிறீர்கள்
பலசமயம்
என் வீட்டைக் கடந்தும் போகிறீர்கள்
உங்களை வரவேற்று உபசரிப்பது
எப்படி எனத் தெரியாமல்
உங்களுக்காக உருவான வீட்டிலிருந்து
வருந்திக் கொண்டிருக்கிறேன்.

## இந்தச் சாலை

நிலவொளியில்
போய்க்கொண்டிருக்கிறது சாலை
தரையிறங்கிய மேகக்குவியல்கள்
மலைகளாய் எதிர் நிற்கின்றன
நிலமெங்கும் நீர்த்தெப்பங்கள்
மின்னி மிதக்கின்றன
நிறுத்தி வைக்கப்பட்ட மர ஓவியங்கள்
கையசைத்து விலகுகின்றன
மனிதக் கூட்டமொன்று
உற்சாகப் பாடலோடு கடந்து போகிறது
குளிரை வாரிவந்து
நெஞ்சுக்குள் இறைக்கிறது காற்று
எல்லாம் குழம்பிய சுவை
உன் முதல் முத்தம் போல்
போய்க்கொண்டேயிருக்கட்டும்
இந்தச் சாலை.

உலகத்தமிழ்.காம்

## கருணை

எரிகோளங்கள் இரண்டு
என்னை நோக்கிச் சுழன்று வந்தன
போர்வைக்குள் பதுங்கினேன்
கரியும் நாற்றமுணர்ந்து
பதறி வீசிவிட்டு
அறையெங்கும் ஓடினேன்
ஒளிய இடமே அற்ற
சுவர்ப் பொந்து அது
கதவுடைத்து வெளியேறினேன்
திசைவெளி அறியாது
ஓடிக் களைத்தபின்
திரும்பிப் பார்த்தேன்
என்னைச் சுற்றிலும்
எரிகோளங்கள் ஏராளம்
காணச் சகியாமல்
கவிழ்ந்து விழுந்தேன்
பின்மயிர் பொசுங்கிற்று
தோல்கள் கருகும் நாற்றம்
உடலெங்கும் நெருப்பின் ஊர்தல்
மெல்லத் திரும்பிய கணத்தில் கண்டேன்
என்னிலிருந்து விலகி
கருணையோடு செல்லும்
இரு விழிகளை.

உலகத்தமிழ்.காம்

## என் நாட்கள்

உள்ளிருந்து பார்த்தால் மட்டுமே தெரிபவை
அனுமதி மறுக்கும் அறைக் கண்ணாடிகள்
முகமூடிப் புகையுருவங்கள்
பீதி பெருக்கி நகர்ந்து செல்பவை

இதயத்தைக் கையிலேந்தி எடுத்துச் சென்றிருப்பவை
குருதி கேட்கும் பிசாசுகளோ
கதவுதைத்து வேகமாய் வெளியேறும் கதறல்
இறுதி வலியின் பீரிடலோ

எந்திர சமிக்ஞை ஏந்தி வரும் சேதி
ஆறுதல் களிம்போ
விரல் பற்றவரும் வண்ணத்துப் பூச்சி வடிவு
தேற்றும் தூதோ

திறவாப் பெருங்கதவின் சிற்றிடைவெளியில்தான்
கசிந்து வரவேண்டும் ஒளிக்கீற்று
கவனியாது அலட்சியமாய்க் கடந்தேகும் கண்கள்தான்
கொண்டு தரவேண்டும் கருணையின் துளி

அவசர சிகிச்சைப் பிரிவின்முன்
காத்துக் கிடப்பவனின் பதற்றத்தோடு
என் நாட்கள்.

உலகத்தமிழ்.காம்



## வெகுசில வார்த்தைகள்

சிறுமி ஒருத்தி தன் கண்களைப் பற்றிச்
சொல்லிக்கொண்டிருக்கிறாள்
தன் கண்களின் மீதேறிப் பயந்தோடிய
முயல் பற்றி அவள் விவரிக்கிறாள்
தன் கண்களின் வழியோடிக் கரைந்த
நதியலை ஒன்றை வருணிக்கிறாள்
தன் கண்களை மலர்த்திய ஒளிக்கிரணங்கள்
ஒடிந்து விழுந்ததைச் சொல்லிக்கொண்டிருக்கிறாள்
தன் கண்களை வருடிய பூங்கொத்துக்கள்
கருகிய வாடை பற்றி
மூக்கு சுழித்து அவள் பேசுகிறாள்
தன் கண்களை ஏமாற்றிஏமாற்றி
வெண்ணிற அலகை
இலைகளுக்குள் மறைத்துக்கொண்ட
குயில் பாடலின் மௌனம் பற்றி
அவள் கூறுகிறாள்
கேட்கத் தீராத
அவள் கண்கள் கண்ட காட்சிகளில்
பூஞ்சை படர்ந்த முடிவைப் பற்றி
அவள் சொல்கிறாள்
வெகுசில வார்த்தைகளே அவை
எனினும்
மனதின் அதிர்வுகளைப் பிரித்தறியும் செவி
எனில் நிச்சயம் கேட்டிருக்கும்.

உலகத்தமிழ்.காம்

## நீர் மிதக்கும் கண்கள்

எதையாவது விட்டுச் செல்வதே
வழக்கமாயிற்று உனக்கு
நீ விட்டுச் சென்ற சொற்கள்
சுவர்களெங்கும் படிந்து கிடந்தன
ஒற்றி எடுத்து
உன்னிடம் திருப்பிக் கொடுத்தேன்
நீ விட்டுச் சென்ற நிழல்
நெளிந்து குறுகித் தத்தளித்தது
காலடிக்குள் கொண்டு நிறுத்திக்
கவனமாய் ஒப்படைத்தேன்
நீ விட்டுச் சென்ற மௌனம்
வாய் திறந்து புலம்பிற்று
தட்டிக் கொடுத்து அமைதியாக்கி
உன் வார்த்தைகளுக்கிடையில் கொண்டு சேர்த்தேன்
சிதறிய ஆடைகள் போல்
நீ விட்டுச் சென்ற கனவுகள்
எங்கும் இறைந்து கிடந்தன
எடுத்து மடித்துப் பத்திரமாய்த் தந்தேன்
இப்போது
விட்டுச் சென்றிருக்கிறாய்
நீர் மிதக்கும் கண்களை.

உலகத்தமிழ்.காம்



## சாலை மரம்

நேற்றிரவு என்னுள் முளைத்த
இந்தச் சாலை மரத்தை
எப்படிக் காப்பாற்றிவைப்பதெனத் தெரியவில்லை
சாம்பல் படிந்த இலைகள்
தாழ்ந்த கிளைகள்
ஓராயிரம் பறவைகள் உட்கார்ந்து போன
செதில் வடுக்கள்
இரவின் மோனத் தவத்தில்
கரைந்து கலந்த இம்மரம்
ஆணிக்குள் அடைபட்ட பிசாசுகளை
மடியேந்திக் காத்தது
வாகனம் மோதிப் பட்ட பெருங்காயம்
ஆற்றிச் செரித்த மரம் இது
அகல விரியும் பரப்பிலிருந்து
அடைக்கலமாய் வந்தென்னுள்
நேற்றிரவு முளைத்த
இந்தச் சாலை மரத்தை
எப்படிக் காப்பாற்றிவைப்பதெனத் தெரியவில்லை.

குதிரைவீரன் பயணம், ஆகஸ்ட் 2003

## அழைப்பு

ஒவ்வொரு வேனிற்காலத்திலும்
அவனுக்கு அழைப்பு வருகிறது
போய்ச் சேரும்போது
இலை கொட்டிய மரங்கள்
வெறுங்கிளைகளாய் நிற்கின்றன
துருத்திய முன்பற்களென
மலைப்பாறைகள் தெரிகின்றன
காய்ந்த புற்களையும்
ஆடுகள் கரண்டுவிட்டிருக்கின்றன
வெம்மைக் காற்று மோதும் முகங்களை
வறண்ட விரல்களால் வருடிச் சிரிக்கிறான்
இந்தப் பருவத்திற்கே
தான் ஏற்றவன் போலுமென
மனம் சுருங்கிப் போகிறான்
அவன் வந்து போனபின்
துளிர்க்கும் மரக்கிளைகளைப் பார்த்து
எல்லாம் அவன் வருகையினால்தான்
என்றெண்ணி மகிழ்கிறது அழைப்பு.

குதிரைவீரன் பயணம், ஆகஸ்ட் 2003



## ஒளிமூலம்

எல்லாவற்றையும் மறந்துவிட வேண்டும்

ஆசி வழங்கும் கை அடையாளமிட்டுச் செல்ல
அடுத்த கை ஆயுதம் ஏந்தியிருக்கக்
கொலைவெறிகொண்டு
கடவுள்கள் நமது தெருக்களில் திரிந்தனர்
கூப்பிய கைகள் வெட்டப்பட்டன
தொழுத தலைகள் துண்டிக்கப்பட்டன
அழுகைகளை மறைக்கும் கூச்சல்கள் எங்கும்
கடைசியாய்க் கடவுள்கள்
மயானத்தைச் சிருஷ்டித்தனர்

ஆனால் நாம்
எல்லாவற்றையும் மறந்துவிட வேண்டும்

வானம் மூடப்பட்ட பொழுதொன்றில்
கடவுள்களுக்கு ஆயிரமாயிரம் கைகள்
முளைத்தெழுந்தன
எல்லாவற்றிலும் இறுக மூடிய ஒரு ரகசியம்
வரலாறு திரிக்கப்பட்டது
எரிக்கப்பட்டது
இடித்து நொறுக்கப்பட்டுப் புதைக்கப்பட்டது
காலத்தின் முகத்தில் சாம்பல் படலம்

நாம்
எல்லாவற்றையும் மறந்துவிட வேண்டும்.

ரத்தக்காவி தரித்த கடவுள்கள்
அகன்ற நெடுஞ்சாலைகளைத் திறந்து
குறுக்குச் சந்துகள் நோக்கி
ரத யாத்திரைகளைத் தொடர்ந்து நடத்தினர்
ஒவ்வொரு உருளலின்போதும் ஒவ்வொரு வெடிப்பு
ஒவ்வொரு வெடிப்பின்போதும்
ஒவ்வொரு பாலைவனம்

பூப்பூவாய்ச் சிதறும் அழகு
அண்ணாந்து பார்த்தபடி மண்டையோடுகள்
கடவுள்கள் மகுடம் சூட்டிக்கொண்டனர்

ஆனால்
எல்லாவற்றையும் மறந்துவிட வேண்டும்

வால் முளைத்த கடவுள்கள்
தீயேந்தி எல்லா இடங்களுக்கும் ஓடினர்
மரங்களில் பற்றியது தீ
மொழிகளில் பற்றியது தீ
எரிந்தது நிலம் எரிந்தன ஆறுகள்
எரிந்தது காடு எரிந்தன வீடுகள்

இந்தியா ஒளிர்கிறது
எல்லாவற்றையும் மறந்துவிட வேண்டும்
மறதி நமக்கு விதிக்கப்பட்டது

கவிதாசரண், மார்ச் - ஏப்ரல் 2004



## முலைகள்

உன்னை அறிந்துகொண்டது
முலைகளால்

ஊறிக் கிடக்கும்
சம்மஞ்சோற்று உருண்டைகளாய்த்
தோன்றின முதலில்
பால்யத்தின் விருப்பம் மீதூரப்
பிசைந்துபிசைந்து உண்டேன்
மலைச் சுனையென மோகித்து
உறிஞ்சித் தீர்த்தேன்
இடைவெளியில்
இதழ் பதித்துத் தூங்கினேன்
நகக்குறிகளும் பற்குறிகளும்
பதிந்த வடுக்கள் கண்டு
பெருமிதப் புன்னகை சிந்தினேன்
வெண்ணெய்க் கட்டிகளென
நுங்குக் கண்களென
பஞ்சு மிட்டாயென
ஒவ்வொரு நாளும்
ஒவ்வொரு விதமாய்க்
கற்பித்துக் கொண்டேன்
உன்னை
முலைகளாய் அறிந்து
முலைகளாய் உணர்ந்து
முலைகளாய்ப் பாவித்துத்
தீர்ந்த பொழுதொன்றில்
ஒன்றுக்கும் இன்னொன்றுக்கும் இடையே
காததூரமெனப் பரிகசித்துப்
புறம் ஒதுக்கினேன்.

# ஆகாவழி

புரண்டோடும் பெருஞ்சாலைக் கரையில்
காலகாலமாய் நின்று தவிக்கிறேன்
வாகனங்கள் பிளிறுகின்றன
புகைக்குசு நாற முகம் மறைத்த
வேகமூஞ்சுறுகள் விரைகின்றன
ஆகும் சிறுவெளிகளில்
பாய்ந்தோட அஞ்சிநிற்கும் கோழைக்கால்கள்
என்னுடையவை
முன்வைத்த அடிகளைத் தூர ஒலிக்கதறலில்
பின்னெடுத்துப்பின்னெடுத்து
எத்தனையோ முறை
இந்தப் பின்வாங்கல்
என் கண்ணெதிரே
குருட்டுக் கிழடொன்று தடியுயர்த்தி
அனைத்தும் ஸ்தம்பிக்கக் கடந்து போயிற்று
சிறுபிள்ளைக் கூட்டம்
கைகோர்த்து எதிரோடிற்று
வளைந்து நெளிந்து புகும் விடலைச் சாகசங்கள்
கடப்பவர் எண்ணிக்கை ஆயிரமாயிரம்
வெளிச்சம் படாத ஓரக் கரைதனில்
நின்று தவிக்கிறேன்
காலகாலமாய் நான்.

# அப்போதிருந்து

விசும்பலடங்கி வயிற்றருகே
பூனைக்குட்டியாய்ச் சுருண்டு தூங்குகிறான்
என் மகன்

பொம்மைகளைப்
பாதுகாப்பாய் வைத்துக்கொள்ளத் தெரிகிறதா என்றேன்
பொம்மைகளே
பாதுகாப்பாய் இருந்துகொள்ளும் என்றான்

பொம்மைகளைப்
போகும் வரும் வழியெங்கும் பரப்பி வை என்றேன்
பொம்மைகள்
நின்றிருக்கும் உட்கார்ந்திருக்கும்
பார்த்து ஒதுங்கிப் போயேன் என்றான்

பொம்மைகளை
உடைத்தால் வாங்கித் தரமாட்டேன் என்றேன்
பொம்மைகள்
உடைந்தால் வேறொன்றாகிக்கொள்ளும் என்றான்

பொம்மைகள்
பதிலுக்குப் பதில் பேசுமா என்றேன்
பொம்மைகள்
அப்படித்தான் பேசும் என்றான்

பொம்மைகள்
அப்படிப் பேசினால் அடிப்பேன் உதைப்பேன் என்றேன்
பொம்மைகளும்
திருப்பி அடிக்கும் உதைக்கும் என்றான்

அப்போதிருந்துதான்
எல்லாப் பொம்மைகளின் கண்களும்
என்னையே உற்றுப்பார்க்கத் தொடங்கின.

*தீராநதி, ஜூன் 2005*

## ஒற்றைப் பனை

என் தியானத்தின் மையமாய்
எப்போதும் எழுந்து நிற்கிறது
அந்த ஒற்றைப் பனை
மிகவுயர்ந்த காட்டுப்பனை அது
அடியிருந்து மேல்வரை ஓலைக்கூட்டம்
ஓலைகள் பற்றியேறிச்
சூழ்ந்து கிடக்கும் கொடி வகைகள்
பறவைக் கூடுகள்
பாம்பு முட்டைகள்
காய்ந்த ஓலைகள் சுழற்றும் காற்றொலி
மண்பார்க்க வாய்க்காமல்
விழுந்த பாதித் தூரத்தில்
நின்றேங்கும் பனம்பழங்கள்
எந்தச் சலனமுமின்றி
உச்சியில் முட்டிவரும்
கூர்நுனிக் குருத்து.

*தீராநதி*, ஏப்ரல் 2004

## இறுக மூடிய விரல்கள்

மரணத்தின் கொடுங்கைகளில் அகப்பட்டுக்கொண்ட
அந்தக் கண்களின்முன் நானிருந்தேன்
பிடி இறுகஇறுகப்
பீதியுற்றுச் சுழன்ற கண்கள்
தன் கடவுளை
என் கைகளில் ஒப்படைத்துச் செல்லத் தவித்தன
மங்கி வடியும் ஒளிப்பந்தாயிருந்த கடவுள்
தாவி என்னைப் பிடித்துக்கொள்ளச்
சிறுசம்மத அசைவை எதிர்பார்த்திருந்தன கண்கள்
இறுக மூடிய விரல்களைப்
பிரிக்கவேயில்லை நான்.

*தீராநதி*, ஏப்ரல் 2004

## இடப்பெயர்ச்சி

ஒவ்வொருமுறை இடம்பெயரும்போதும்
முதிராக் கதிரோடு பயிர் பிடுங்கியெடுக்கும் துடிப்பும்
ஜன்னலில் விரியும் புதிய காட்சிகளைக் காணும்
சுற்றுலாப் பயணியின் துள்ளலும்
எனக்குள் வந்து சேர்கின்றன.

வெற்றிடம் எனக்குப் பிடித்தமானது
எனினும்
வெற்றிடமாக்கி வெற்றிடம் சேர்கையில்
விட்ட வெற்றிடம் மறக்கவும்
சேர்ந்த வெற்றிடம் நிரப்பவும்
விரைந்து முயல்கிறேன்

முதுகேறிக்கொண்ட என் சொற்பப் பொருள்களை
அவற்றிற்குரிய இடங்களைக் கண்டறிந்தும்
தேர்வு செய்தும் அடுக்குகிறேன்
ஏதாவதொன்று இடமற்று மிஞ்சி
பதற்றம்கொள்ளச் செய்கின்றது

ரகசியமாக எப்போதும் பாதுகாக்க விரும்பும்
நாட்குறிப்பேட்டிற்கு இடமின்றி
அம்பலமாகிப் போயிற்று ஒருமுறை
முழு அலமாரியைத் தனக்கெனக் கேட்ட
சிறுகடவுளுக்கு
சாதாரண மஞ்சள்பையைத்தான் தரமுடிந்தது
பிறிதொருமுறை

முக்கிய நாளொன்றின் நினைவுப்பரிசாகிய
அறைகள் பலகொண்ட அழகிய நகைப்பெட்டி
எந்த இடத்திற்கும் பொருந்தாமல்
அலைக்கழித்தது வேறொருமுறை



நண்பனிடம் கடன்வாங்கி மறந்த புத்தகத்தைக்
காட்டிக் கொடுக்கும்படியான இடத்திலேயே
வைக்க நேர்ந்தது இன்னொரு முறை

சொல்லிச் செய்ததால்
வலு இறுகிக் கம்பீரமாக நின்றிருந்த பீரோவை
உள்ளே நுழைக்க முடியாமல்
நித்திய நோயாளிபோல்
வராண்டாவில் படுக்கவைக்க நேர்ந்தது
இந்தமுறை

எங்கும் தனக்கென ஓரிடத்தை
நிரந்தரமாய் வைத்திருப்பவற்றால்
பிரச்சினை எதுவுமில்லை
எம்முறையும்.

தீராநதி, செப்டம்பர் 2004

## சிருஷ்டி

ஒரு சொட்டுக் கண்ணீரேனும் சிந்தாமல்
ஒரு நாளும் பள்ளிக்குப் போவதில்லை
என் மகன்

புகார்கள் நிரம்பித் ததும்பும் பையுடன்
மாலையில் வந்து சேர்வான்
பையை அவன் திறக்காமல் இருக்கவேண்டும்
என்பதே என் அன்றாடக் கவலை

நடக்கும் தூரத்திலுள்ள
பள்ளி ஒன்றில் சேர்த்துவிட்டேன்
செல்ல அரைநாளும்
திரும்ப அரைநாளும் எடுத்துக்கொண்டான்

வாகனத்தில் கொண்டுவிடும் தூரமுள்ள
பள்ளிக்கு அனுப்பினேன்
வாகனம் பழுதாக வேண்டும் எனவும்
வாகனத் திருடன் விரைவில் வரவேண்டும் எனவும்
அவனுடைய கடவுள்களிடம் வேண்டுதல் செய்தான்

பேருந்தில் செல்லும் தொலைவிலுள்ள
பள்ளி ஒன்றைக் காட்டினேன்
உயர்ந்த கட்டிடங்களை அண்ணாந்து பார்த்து
'பொக்லைன்' வந்தால்
ஒருமணி நேரத்தில் இடித்துவிடுமா என்று கேட்டான்

அவனுக்கான பள்ளியை
எப்படிச் சிருஷ்டிப்பதென
யோசித்துக்கொண்டிருந்த நாளில்
வீட்டிற்குள் அவனோர்
அற்புத நகரம் உருவாக்கியிருந்ததைக் கண்டேன்



கண் விரியப் பார்த்த என்னை
அந்நகரத்துக்குள் அழைத்துச் சென்றான்
கூரிய கட்டிடங்கள்
மிதக்கும் சாலைகள்
விளையாட்டுத் திடல்கள்
எல்லாம் சுற்றி முடித்த நான்
'எங்கே உன் பள்ளிக்கூடம்?' என்றேன்
வினோதமாக என்னைப் பார்த்த அவன்
முகம் சுருங்கச் சொன்னான்
'இது பள்ளியில்லா நகரம்.'

காலச்சுவடு, ஜனவரி 2005

❁

## விரல்கள்

கட்டை விரல் வெட்டி
குருவுக்குச் சமர்ப்பித்தோர் எம்முன்னோர்
சுண்டு விரல் தறித்துக்
காணிக்கை தந்தோம் நாங்கள்
எதிர்காலச் சந்ததிக்கு இருக்கின்றன
இன்னும் மூன்று.

கவிதாசரண், மே - ஜூன் 2003



## செந்நிறக் கண்கள்

தினமொரு பொருள் கொண்டுதரும் காகம்
இன்றென் கைகளில் சேர்ப்பித்துச் சென்றது
செந்நிறக் கண்கள் இரண்டை

சமைப்பின் வெதுவெதுப்பு மாறாத
உருண்டைக் கண்கள்
மூடித்திறந்து மூடித்திறந்து
தவிக்கும் இமைகள்
காற்றசைவிற்கும் மயிரிழை நடுக்கம்
பிரிவின் தாளாத் துன்பம்
இரத்தமாய்ச் சொட்டும் அவை
எங்கிருந்து பிய்த்தெடுத்தவை
எதன் பகுதி அல்லது முழுமை

பீழை பீடித்து நொய்ந்த கண்கள்
அடுக்கப்பட்டிருக்கும் என் அலமாரியில்
இவற்றை எவ்விதம் வைப்பேன்
உயிர் பொங்கும் துடிப்பு சுட
கைகளைச் சட்டென வீசினேன்
அக்கண்களுக்குள் ஒடுங்கிக் கிடந்த சிறுபறவை
சிறகு பெற்று பறக்கக் கண்டேன்.

காலச்சுவடு, ஜனவரி 2005

## குழந்தைகளைத் தண்டித்தல்

குழந்தைகள்
தொடர்ந்து குற்றம் புரிகிறார்கள்

குற்றம் புரியும்
குழந்தைகளைத் தண்டிக்க
எளிய முறைகள் ஏராளம் உண்டு
செவிடாகும்படி கத்தலாம்
காதைப் பிடித்துத் திருகித் தூக்கலாம்
கையாலோ தடிகொண்டோ அடிக்கலாம்
இழுத்து வெளியே எறியலாம்
வாத்திகளிடம் சொல்வேன் என மிரட்டலாம்
சொல்லியும் வைக்கலாம்

எனினும்
சமயத்தில் இவையொன்றும்
பலனளிப்பதில்லை

நம் புறப்பாட்டின் அவசரத்தைப்
புரிந்துகொள்ள முடிகிறதா
அவற்றால்
தொலைபேசி அழைப்பொன்று
கிடைக்காத பதற்றத்தை
உணர முடிகிறதா
பொதுவிடங்களில் நாகரிகமாக
நடந்துகொள்ளத் தெரிகிறதா
நம்மால்
நிம்மதியாகச் சிறுபயணம் போக முடிகிறதா

வழியில் போகும் யாரையேனும் அழைத்துப்
பயமுறுத்தச் சொல்லலாம்
பொம்மைகளை ஒளித்து வைக்கலாம்
வீட்டுப்பாடம் செய்ய வற்புறுத்தலாம்
வரைந்த ஓவியத்தைக் கிறுக்கல் என்று சொல்லிப்
பிடுங்கிக் கிழிக்கலாம்
கதைகளை நீதி சொல்லி முடிக்கலாம்



நமது
தண்டனைகளைத் தாண்டியும்
குழந்தைகளின் குற்றங்கள்
பெருகிக்கொண்டேயிருக்கின்றன.

ஆழ்ந்த விவாதங்களினூடே
ஓடிவந்து முதுகேறி உரசி
அவை செய்யும் இடைஞ்சல்கள் எத்தனை

காலச்சுவடு, ஜனவரி 2005

## பரிசாடை

மலைப் பச்சையால் நெய்தெடுத்த
ஆடையைப் பரிசளித்தாய்
மிளகு மணம் கமழும் அதனை
எடுத்தணியப் பிரியமேயில்லை
பச்சை
நீயிருக்கும் உயரத்தின் தூரம்
குழிந்து கிடக்கும் உன்மடி
இரவுகள் பச்சையால் ஒளிர்கின்றன
பகலெங்கும் பச்சையின் அடர்த்தி
பறவையின் சிறகுகள் உதிர்ந்து
வானெங்கும் தீட்டிய பச்சை
தளிர்ப்பச்சை
வெளிர்பச்சை
அடர்பச்சை
புதர்கள் போர்த்திப் புதிராய்ச் சிரிக்கும்
உயர்மரங்கள் அசைத்து விரிக்கும்
ஆடையின் நுனிபிரித்து
எங்கெங்கும் விரித்துவிட்டு
அதன் நடுவே
ஆழ்ந்து புதைகிறேன்.



## அப்பாவின் வேலி

என் தந்தை
ஒரு வேலி அமைத்திருந்தார்
உயரமான நெடிய வேலி
கொடிகள் ஏறிப் பூத்துக் கிடக்கும்
குன்றிமணிகள் வெடித்துச் சிரிக்கும்
வீட்டினுள்ளிருந்து பார்த்தால்
அந்தரத்தில் மிதக்கும் பச்சை வளையமெனத் தோன்றும்

வெளியேறிப் போகும்போது
குறிப்பிட்ட தொலைவில்
கூடவே அதுவும் வந்துகொண்டிருக்கும்
என் தந்தையின் வேலி
அறிந்த எல்லோரும்
பரிகசித்துச் சிரிப்பர்
கற்றாழைப் பழம் பறித்து வந்தாயா
காந்தள் மலர்கொண்டு வந்தாயா
கூர்முள் குத்திய காயங்கள் காட்டு
வேலியைச் சுமந்த தோள்வடு எங்கே
எதற்கும் பதிலில்லை என்னிடம்

அதிகாலை வேளைகளிலும்
அந்திமாலைப் பொழுதுகளிலும்
வெகுநேரம் வேலியைச் சரிசெய்து கொண்டிருப்பார்
முட்களின் நுனிகள் சிறிதும் மழுங்கிவிடக் கூடாது
சிறுசந்துகள் உருவாவது வேலிக்கே ஆபத்து

வேலியின் அவசியம்
வேலியின் பாதுகாப்பு
வேலிப் பராமரிப்பு
என்பன பற்றியே எப்போதும் என்னுடன் பேசுவார்
பேசும்போதெல்லாம்
ஓரக்கண்ணால் என்னைப் பார்த்துக்கொள்வார்

உண்மையாகவே
வேலியைப் பற்றி எனக்குப் புகார்கள் இல்லை
வேலியைப் பற்றிப் பெருமிதமும் இல்லை
வேலி இருக்கட்டுமா வேண்டாமா என்று
யாராவது கேட்டிருந்தால்
பதில் சொல்லத் தடுமாறியிருப்பேன்
வேலி என் நினைவிலிருந்து
கழன்றுகொண்டிருந்த சமயத்தில்
தயக்கத்தோடு என்பின்னால்
வேலி வந்துகொண்டிருந்த நாட்களில்
வேலியின் ஓரிடத்தில் எலி நுழையுமளவு
பொந்தொன்று உருவாயிற்று
பதற்றம் கொண்ட தந்தை
கண்டுபிடித்து அடைக்கஅடைக்கப்
பொந்துகள் பெருகி வேலி முழுக்க ஓட்டைகள்
நீள வேலியெங்கும் ஓடியபடியே இருந்த என்தந்தை
என்னுடன் பேசுவதையே நிறுத்திக்கொண்டார்
நான்தான் எலியாகி
நள்ளிரவில் பொந்துகளை உருவாக்குகிறேன்
என்று அவர் கருதினார்.
நான் என்ன செய்யட்டும்
ஆனால்

•



## வழிப்பறி

கொண்டை ஊசி வளைவில்
முனகியபடி மலை ஏறிய பேருந்தொன்றை
யானைகள் சில வழிமறித்தன
அவசரமாய் ஜன்னலை
அடைத்தனர் பயணிகள்
என்ஜினை அணைத்தார் ஓட்டுநர்
கண்ணாடி தடவிப் பார்த்த துதிக்கைகள்
ஜன்னல்களைத் தட்டித் திறந்தன
பைகளைப் பிடித்திழுத்து உருவி
தண்ணீர்ப் பாட்டில்களை மாத்திரம்
எடுத்துக்கொண்டன
பின் அவை
வந்த வழியே திரும்பிப் போய்விட்டன.

உயிர்மை

•

83131
0311INP,N
P07
மாவட்ட மைய நூலகம், திருவண்ணாமலை.

## நாக்குகள்

நாக்குகள் மரத்துப்போகட்டும்
எனச் சபித்தார் கடவுள்
சுவையிழந்த நாக்குகள்
உள்சுருண்டு கிடந்தன சில நாட்கள்
பதுங்கி நுனி நீட்டிய நீள்நாக்கொன்று
கடவுள் காண
மூக்கு தொட்டு வேடிக்கை காட்டத் தொடங்கிற்று
பின்
ருசி பேதமற்று
உணவு சுழற்றிக் கொடுத்துச்
சேவகம் பழகின சில
சுழற்சியில் தேர்ச்சி கொண்டவை
சீர்செவி சென்றுசேர
பேச்சுத்தான் என
மொழிகளைச் சிருஷ்டித்துக்கொண்டன
பழையதை நினைவூட்டி
எச்சில் ஒழுகக்
கால்களை நக்கித் தந்தன சில
காட்சி தருகையில் எழுதக்கூடுமென
வாய்பிளக்க வெளித்தள்ளி
பிரகார வழியெங்கும்
அம்மணமாய் அணிவகுத்தன சில
கருவறை புக வாய்த்தவையோ
ரகசியக் கட்டளைக்காய்க்
காத்துக் கிடந்தன
எதற்கும் ஆகாத
புண்வெடித்த நாக்குகள் சில



அறுபட்டு
உண்டியல் காணிக்கையாய்ப் போய் விழுந்தன
திரு உலா வந்த கடவுள்
திருப்தியாய்ப் புன்னகை பூத்தார்.

கவிதாசரண், மே - ஜூன் 2003

## மயானத்தில் நிற்கும் மரம்

மயானத்தில் நிற்கும் மரம் நான்

யாருடைய கால்மாட்டிலோ தலைமாட்டிலோ
வெறுமனே நின்றிருக்கிறேன்
உடலெங்கும் புகைக்கரிப் படிவு
இலைகளில் மாமிச வாடை
என் பூக்களில் ஊறும் கண்ணீர்

பூக்கள் தூவிச்
சிலரைப் பெருமைப்படுத்துவேன்
நிழல் விரித்துச்
சிலரை அரவணைப்பேன்
சிலர் வருகையில்
கண்மூடித் தூங்கிப் போவேன்
சிலர் வருகையிலோ
முகம் திருப்பிக்கொள்வேன்
சிலரை
ஆனந்தமாய் வரவேற்பேன்
எரியும்போது எழுந்தமரும்
சிலரை நெஞ்சிலடிக்க
உருட்டுக்கட்டை தருவேன்

மயானத்தில் நிற்கும் மரம் நான்

என்பாட்டி வந்தநாள் மழைக்காலம்
குளிர்ந்த இலைகளை
வாய்க்கரிசியாய் இட்டேன்

என் தந்தை வந்தபோது இலையுதிர்காலம்
மொட்டை மரமாய் ஏதுமியலாமல்
பார்த்து நின்றேன்



என் மைத்துனன் வந்த சமயம் குளிர்காலம்
நடுநடுங்கி விறைக்கக்
கவிழ்ந்துகொண்டேன்

என் தமையனைக் கொணர்ந்தபோது காற்றுக்காலம்
கிளைகளால் அறைந்துகொண்டு
தவித்துக்கிடந்தேன்

இப்போது
நீர் மறைந்து நிலம் பிளக்கும் கடுங்கோடை
நீ வந்திருக்கிறாய்
என் வேர்கள் அதிர்கின்றன.

(கந்தர்வனுக்கு)

## கண்டடைதல்

உன் சிரிப்பு ஓர் ஊற்று

பள்ளங்களை நிரப்பி
மேடுகளை நனைத்து
எல்லா இடங்களையும் குளிருட்டிச் செல்லும்
நடுங்கிக் குளிரில் விறைத்திருக்கிறேன் நான்

உன் சிரிப்பு ஓர் ஓடை

அள்ளிக் குடிக்க
உயிர் பெருக்கும்
அமுதச் சுவையூட்டி நழுவிச் செல்லும்
அந்நீரொன்றே பருகி வாழ்ந்திருக்கிறேன் நான்

உன் சிரிப்பு ஒரு நதி

மீன்கள் பதுங்கும் ஆழங்களும்
அலைகள் தொடரும் மேற்பரப்பும்
ஒருங்கடங்கக் காட்டி ஓடும்
மூச்சுமுட்ட மூழ்கித் தப்பிப் பிழைத்திருக்கிறேன் நான்

உன் சிரிப்பு ஓர் அருவி

கண்ணீர் போல மெல்ல வீழ்ந்து
குரூர முகங்களை மூடிவிடும்
அழகு வளமெடுத்த ஓசைச் செழிப்பு
செவியடைக்கக் கேட்டிருந்திருக்கிறேன் நான்

உன் சிரிப்பு ஒரு பேராறு



வெயில் கொளுத்தும்
வறண்ட காலங்களில்தான்
கூடப்பெருகி அணைக்கும் ஆனந்தத் தழுவல் அது
ஆண்டுகளைச் செலவிட்டுக் கண்டடைந்திருக்கிறேன் நான்.

## என் தவறுகள்

நான் தவறுகள் செய்கிறேன்
தொடர்ந்து செய்கிறேன்

என்னுடையவற்றில்
தவறான தவறுகள் என்று எவையுமில்லை
எல்லோரும் எளிதாகக் கண்டுகொள்ளும்படியான
சாதாரணத் தவறுகள் அவை

என் தவறுகள் பற்றிய மிகநீளப் பட்டியல்
என் அம்மாவிடம் இருப்பது எனக்குத் தெரியும்
இன்னுமொரு நீளப்பட்டியலை
என்மனைவி தயார் செய்துகொண்டிருக்கிறாள்
என் குழந்தைகளும்
ஆளுக்கொரு பட்டியல் வைத்திருக்கிறார்கள்
என் தவறுகள் பற்றிய விவரங்கள்
என்னைத் தெரிந்த எல்லோரிடமும் கிடைக்கின்றன

நீங்கள் என் நண்பரெனில்
உங்களுக்கு வாய்ப்புகளை நிறைய வழங்குகிறேன்
நீங்கள் என்னை எதிரியாகப் பாவிப்பவரெனில்
மிக எளிதாக உங்களிடம் தோற்றுப் போகிறேன்

ஏன் இப்படித் தவறுகள் செய்கிறேன்
எதனால்
அத்தவறுகளைத் திருத்திக்கொள்ள முயல்வதில்லை
நிஜமாகவே
எனக்குத் தெரியவில்லை
ஆனால்
என் தவறுகள்
எல்லோருக்கும் தேவைப்படுகின்றன.



## இன்னுமொரு நிலவுப்பாடல்

அந்தி இருளில்
காளான் குடையென முளைத்து விரிந்த
கீழ்வானத்து நிலாவுடன் நடக்கத் தொடங்கினேன்
ஆளற்ற பாதை
பாதையற்ற வழி
நடக்க நீளும் தூரத்தை
ஈரக்கை கொடுத்துக் கதை கூறிக்
கடக்க உதவிற்று நிலா
சோர்ந்தபோது
மரக்கிளைகளுக்குள் ஒளிந்துகொண்டு
கண்ணாமூச்சிக் காட்டிற்று
இலைச் சந்துகளுள் தேடி
மஞ்சள் முகம் வருடி
வெளியே இழுத்தபின் பால்ய உற்சாகம் பெருகிற்று
அசட்டை செய்தபோது
மலை முகடுகளுக்குப்பின் மறைந்து போயிற்று
வெகுதூரம் ஓடிக் கடந்து வெளிக்கொணர்ந்ததும்
குறும்புச் சிரிப்பு கண்டு பெருமூச்சு விட்டேன்
துக்கம் பொங்கியபோது
மேகங்கள் மூடிக்கொண்டன
கால் மடித்து அமர்ந்து
கடவுளைத் தியானித்தேன்
கலைந்த மேகங்களுக்குள்ளிருந்து
எட்டிப் பார்த்துக் கருணை பொழிந்தது
ஊர் எல்லையில் விடைசொல்லி
வந்து கதவடைத்துக் கொண்டேன்
வீட்டுக் கூரை உச்சியில்
தடுக்கி விழுந்து
தனியே அழுதுகொண்டிருக்கிறது நிலா
கைவிடப்பட்ட ஒரு மூதாதையென.

## கடைசி ராமசாமி

ராமசாமி எனக்கு அண்ணன்
பள்ளியில்
'குள்ள ராமசாமி' என்பார்கள்
ராமசாமியின் தூதன் நானடா
பாட்டு வந்தால் தலை நிமிர்த்தி
'எம்பேரு' என்பான்
என்னை விடவும்
நன்றாக நீச்சலடிப்பான்
சைக்கிள் ஓட்டுவான்
ஆனால் என்னோடு சேர்ந்து
எங்கும் வரமாட்டான்
என்னை அண்ணனாகவும்
அவனைத் தம்பியாகவும்
கருதும் பேச்சுகள் அவனுக்குப் பிடிக்காது
குறுஞ்சிரிப்போடு அவனை ஏளனமாய்
ஏறிட்ட ஒருபொழுதில் சொன்னான் –
'எல்லார்த்துக்கும் எல்லாருக்கும்
மூத்தவன் ராமசாமிடா . . .'
ஆம்
எங்கள் தாத்தா ராமசாமி
தாத்தாவுக்குத் தாத்தா ராமசாமி
தாத்தாவின் தாத்தாவுக்குத் தாத்தா ராமசாமி
தாத்தாவுக்குத் தாத்தாவின்
தாத்தாவுக்குத் தாத்தாவும் ராமசாமி
எல்லா ராமசாமிகளும்
போய்விட்டார்கள்
இப்போது
ராமசாமி என்று யாருமில்லை.



## பெருஞ்சுமை

மழை கொட்டிக்கொண்டிருந்த
நாளொன்றின் நள்ளிரவில்
கதவு தட்டிய அவர்கள்
கைகளில் இருந்த கடவுளின் மகுடத்தை
என்தலையில் சூட்டிச் சென்றார்கள்
பகலெல்லாம்
வேண்டுதல் குரல்கள் காதடைக்க
விழியிமைக்க இயலாமல்
கருவறைக்குள் முடங்கிக் கிடப்பதும்
இரவெல்லாம்
பீடத்தின் குளிர் ஆசன வாயில் ஏற
எழுந்துபோய் எதுவும் செய்ய வக்கற்று
தனிமையின் அந்தகாரத்தில்
வெறித்துத் துடிப்பதுமாய்க்
கழிகிறது காலம்.

## ரகசியம் அறிந்தவன்

உறைந்த கண்கள் அறிதுயில் என்றிருந்தேன்
அவன் காதுகளில் போட்டுவைக்கத்
தினமொரு வேண்டுதல் எனக்குண்டு
கண்மூடிக் கைகுவித்து
'கண் திறக்க மாட்டாயா'
என்றிறைஞ்சும் என் நெஞ்சம்
கருவறை இருளொளியில்
கல்லில் அடித்து வைத்ததுபோல் அவன்
இமை அசைவும் காட்டியதில்லை
வெம்மை பொடியும் பகலொன்றில்
ஆயத்தம் ஏதுமின்றித்
திடுமென நுழைந்தேன் நான்
தனிமைத் துணிவில்
திறந்திருந்த இமைகளுக்குள்
வெற்றுக்குழிகள்
ரகசியம் அறிந்தவனானேன்
அன்று முதல்
கைப்பிடித்து அழைத்துச் செல்ல
ஆசிக்குத் திசைகாட்ட
ஒளிவன்மை உணர்த்த
மௌனச் சமயமறிய...
அவன் வேண்டுதல்கள் தொடங்கின
என்னிடம்.

❁



## நாற்காலி

காலத்தின் பழமையும் பிசுக்கும் மண்டிய
நாற்காலி ஒன்று அவனுக்குக் கிடைத்தது
தயக்கத்தோடு நுனியில் உட்கார்ந்தான்
கைப்பிடிகளில் மெல்லக் கைவைத்தான்
யாருமற்ற தருணங்களில்
கூச்சத்துடன் சாய்ந்துகொண்டான்

மேஜையும் அது கிடந்த அறையும்
நாற்காலியின் ஆளுகைக்கு உட்பட்டதென அறிந்தான்
அவன் சொற்களை மேஜைமணி ஒலித்தபோது
அறை கடந்த அதன் ஆற்றல் உணர்ந்தான்
நாற்காலியிலேயே சுருண்டு தூங்கினான்
நாற்காலியின் அடிப்பகுதியில் எடுத்து மூடும்
ஓட்டை வழியாகக் கடன் கழித்தான்
நாற்காலி பேசுவது கோப்பு மொழிகள்
விறைப்பும் கடுமையும் கொண்டது அதன் முகம்
அனுமதி பெற்று அறைக்குள் போகும்
எவரும் இப்போது தாராளமாய்ப் பேசலாம்
நாற்காலியோடு.

❁

## வேம்பின் பாடல்

எனக்குள் வேம்பொன்று
முளைவிட்டு வளர்ந்திருக்கிறது
இலை கிள்ளாமல்
கிளை தறிக்காமல்
அதன் போக்கில் வளரவிட்டிருக்கிறேன்
அகலக் கிளை பரப்பி
அடர்இலைகள் செழிக்க
விண்நோக்கி உயர்ந்து போகிறது
மரமேறிச் சறுக்கி விளையாடுகிறேன்
செதில்கள் உண்டாக்கிய சிராய்ப்புகள்
மாயமாய் மறைகின்றன
உச்சானிக் கொம்பில் சிறுகூடு கட்டி
பாதுகாப்பாய் உறங்குகிறேன்
காற்றிசைக்கும் தாலாட்டில் காலம் ததும்புகிறது
கொட்டும் பூக்களில் என்னுடல் மறைகிறது
எறும்புக் கடிகள் பொறுத்து
மணக்கமணக்கத் திரிகிறேன்
பழப் பருவங்களில்
வயிறு முட்டத் தின்று பித்தேறி அலைகிறேன்
எனக்குக் கோடைகாலமே இல்லை
அடர்நிழல் தரும் குளிர்ச்சி எப்போதும்
கசப்புகளை உறிஞ்சி உள்திணித்துப்
பசுமையாய் வெளிப்படுகிறேன்
வேர் ஆழப்பதிந்து எங்கெங்கும் பரவுகிறது
உடலை எருமண்ணாக்கி
விரித்து வைக்கிறேன்
பறவைகள் விழுங்கி இட்ட எச்ச விதைகள்
முளைவிடக் காத்திருக்கின்றன
இனி உங்களுக்கும்
ஆளுக்கொரு கன்று தருவேன்.



## உடைபடும் கணம்

வானினின்றும் தப்பிவந்த மழை
அடைக்கலம் கேட்டு
என்வீட்டுக் கதவை
இரவெல்லாம் விடாமல்
தட்டிக்கொண்டேயிருக்கிறது
காதுக்குள் இறங்கி உடம்பெங்கும்
ஓடுகிறது அவ்வோசை
தாழ்ப்பாள் திறந்து உள்ளே அழைத்து
மழையின் துக்கத்தைக் கேட்டு
ஆறுதல்படுத்தலாம்
மழையிடம் என் கதையைக் கூறியும்
ஆசுவாசப்படலாம்
எழ மனமின்றி
கதவு தட்டப்படும் ஓசையில் லயித்துக் கிடக்கிறேன்
நீளும் இரவில்
கதவு உடைபடும் கணம் வரட்டும் என்று.

## பெருமூச்சு

என்னுடையவை என்னிடமும்
உன்னுடையவை உன்னிடமும்
பத்திரமாக இருக்க
நாம் புணர்ந்தோம்
முடிவில்
தனித்து ஒதுங்கிற்று
பெருமூச்சு ஒன்று.



## விதைப் பானை

இன்று
எனது விதைப் பானை காலி ஆகும் நாள்
கருவறையின் வெதுவெதுப்பில் இருந்தெடுத்து
விதைமணிகளை வெளியில் இறைக்கிறது காலம்
பஞ்சத்தின் போதும்
ஒருமணி எடுக்காது பாதுகாத்து வைத்திருந்தேன்
இரவல் கேட்டவர்களுக்குப் பதற்றம் மறைத்து
இல்லை எனக் கைவிரித்தேன்
மழைப் பருவங்களில் பூஞ்சை அண்டாமல்
பனிப் பருவங்களில் பூச்சி புழுக்கள் துளைக்காமல்
பத்திரப்படுத்த பட்ட பாடுகள் அனேகம்
இப்போது உக்கிரக் கோடையின் நடுவில்
அள்ளி வீசப்படும் இந்த மணிகள் என்னவாகும்
மண்ணின் வாய் திறக்கும்வரை
தூற்றும் காற்றெதிர்த்து நிற்கும் வலு கிடைக்குமோ
பசியோடு இருக்கும் பறவைகளின்
வாயில் சிக்கிவிடுமோ
வெப்பத் தகிப்பில் கருகிப் பதராகுமோ
வீசப்படும் விதைமணிகளை
நெஞ்சு பதைக்கப் பார்த்திருந்தவன்
காலிப் பானையை மூலையில்
கவிழ்த்து வைக்கிறேன்
அறுவடை நாளின்
கனவுகளோடு.

## கல் மலிந்த ஊர்

வீடுகளின் சுவர்ப் பிதுங்கலில்
செதுக்கிய கற்கள்
அடித்தாங்கலுக்கும் கற்கள்
நீண்ட கருங்கற்கள் திண்ணைகள்
படுத்துறங்கப் பலகைக்கல் படுக்கைகள்
கற்பாலங்கள்
கல்லடுப்புகள்
கற்கோபுரம்
கல்மலிந்த ஊரின் பேருந்து நிறுத்தத்தில்
காலம் கவிழ்த்த கல்தொட்டியொன்று கிடக்கிறது
அது குழந்தைகளுக்குச் சறுக்குமரம்
வயசாளிகளுக்குச் சாய்துணை
இளைஞர் கூட்டமும் இருந்து களிக்கும்
ஒருவருக்கும் தெரியாது
கவிழ்ந்திருக்கும் அதன் உட்குழிவில்
புதைந்து கிடக்கும்
ஆதி ரகசியம்.



## சுடுகல்

புரோட்டா மாவு பிசைந்துகொண்டிருக்கும்
அந்தப் பையனை எனக்குத் தெரியும்
வேலை முடிந்து அவன் வருவதற்காகக்
காத்துக்கொண்டிருக்கிறேன்
கொட்டிக் குளமாக்கிய மாவில்
நீர் அதிகமாகிவிட்டது
காசெடுத்துக்கொண்டு ஓடுகிறான்
புதுமாவைச் சேர்த்துப் பிசைகிறான்
கைகளில் படிந்த மாவு உடலெங்கும் பரவுகிறது
வெள்ளைப் பாம்பாய்த் திரட்டி எடுத்துக்
கல்லில் வீசி அடிக்கிறான்
உடல் நெளிந்து குழைகிறது
துண்டங்கள் போட்டுச் சுருட்டுகிறான்
உருண்டையும் வட்டங்களுமாய் அவன் உடல்
கல்லெங்கும் சிதறிக் கிடக்கிறது
அவன் வேலை இன்னும் முடியவில்லை
சுடுகல்லில் வெந்தெழுந்த பின்னேனும்
என் நினைவு
அவனுக்கு வருமெனக்
காத்துக் கொண்டிருக்கிறேன்.

## விடுபடல்

என் தந்தையும் தமையனும்
தம் சுமைகளை என்மீது இறக்கிவிட்டுச் சென்றனர்
அநாதியாக நிற்கும் சுமைதாங்கிக் கல்லின்
இந்த ஏகாந்தம்
எனக்குப் பிடித்திருக்கிறது
மணமான நாள்முதல்
என் மனைவியும் நானும்
தொடர்ந்து பிரிந்தே இருக்க நேர்ந்தது
பிரிவே காதலைப் பெருக்கிச் சந்தோஷம் தருகிறது
என் குழந்தையின் கண்ணில்
காலத்தின் பூஞ்சை பீடித்தது
அறுவை சிகிச்சைப் பிரிவில் எழுந்த அவள் அலறலில்
கர்வங்கள் நொறுங்கி மலர்ச்சியுற்றது என் இதயம்
எனக்கு வாய்த்த துண்டு நிலத்தில்
தென்னைகள் தலைகருகிச் சாய்ந்தன
பின்பெய்த பெருமழை ஒன்றின் குளிர்ச்சியில் பூத்த
சிறுபுல்லில் மனம் நிறைந்துபோயிற்று
எதைப் பற்றியும் வருத்தமில்லை
என் கனவுகள் வேரோடு
பிடுங்கப்பட்டன
விடுபட்ட நிம்மதியே என்னைச் சூழ்ந்தது.

●



## கைகள்

இருளறையில்
என்னருகில் படுத்திருக்கும் பிள்ளைகள்
என் கைகளைக் கேட்கிறார்கள்
இருள் விழுங்கிக் கண்சிமிட்டும்
வெளிச்சம் ஒளிர்வதைக் காட்டுகிறேன்
அச்சமூட்டும் கனவுகளிடமிருந்து தப்பிக்கக்
கைகள் வேண்டும் என்கிறார்கள்
மகிழ்வளிக்கும் கனவுகளை அவர்களே
சமாளிப்பார்கள்
வலது கையை மகனுக்கும்
இடது கையை மகளுக்கும் வழங்குகிறேன்
பறவையின் சிறகெனப் பத்திரமாய் எடுத்து
நெஞ்சின்மேல் வைத்து உறங்குகிறார்கள்
கைகளை அப்படியே விட்டுவிட்டு
எழுந்து கொள்கிறேன்
கனவுகளை இழந்தவனின் கைகளுக்கும்
பயன் உண்டு.

●

## மழைச் சொற்கள்

எனக்கென்று
சில சொற்கள் தயாரிக்கப்பட்டிருக்கின்றன
எங்கும்
அவற்றைப் பெற்றுக்கொள்ளவே
அங்கங்கே போகிறேன்
தயாரிப்பில் இல்லாத சொற்கள்
தவறியும் விழுந்துவிடக் கூடாதெனக்
கவனம் கொண்டிருக்கின்றன காதுகள்
எங்கிருந்தோ வந்தமழை
வீசிச் சென்ற சொற்கள்
வெளியே கிடக்கின்றன
நனைந்து.



## நான்

செத்துப்போனவர் தொண்ணூறு வயதுக் கிழவர்
'நிறை வாழ்வு'
'கடைசிவரைக்கும் நினைவோடிருந்தார்'
'கொடுத்து வைத்த சாவு'
சிறுவயதில் துயரப்பட்டு
நடுவயதில் முன்னேற்றம் பெற்ற யாருக்கும்
இருக்கும் கதைகள் பல அவருக்குமிருந்தன
புறக்கணிப்பும் தனிமையும்தான்
முதுமைக்கு வழங்கப்படும் மரியாதை எனில்
அவரும் கௌரவிக்கப்பட்டார்
மலர் மாலைகள் குவிய
பெருந்திரள் இடுகாடுவரை வந்தது
கடைசி நிமிட தரிசனமாக
அவர் முகத்தைக் காண விழைந்தேன்
நரைத்த நிறைதாடி
தூக்கிய மேற்பற்கள்
குழிந்த கன்னம்
துக்க முகம்
அவரை இதற்குமுன் சந்தித்ததேயில்லை
கண்களை மூடும் அந்தக் கடைசி வரட்டியும்
வைக்கப்பட்டது
அம்முகத்தை அடிக்கடி பார்த்த நினைவு
அடையாளம்தான் தெரியவில்லை

எரியும் தீயில் தெளிவாய்த் தெரிந்தது
அந்த முகம்
எவருடையது என்று.

## நேர்ச்சி

எனக்கென்று வீடிருக்கின்றது
அதில்
எனக்கென்று அறையிருக்கின்றது
எனக்கென்றும்
என்னைப் பார்க்க வரும்
நண்பர்களுக்கென்றும்
நாற்காலிகளுமுண்டு
அதிலொன்று
ஒற்றைக் காலொடிந்து முக்காலி
நாலைந்து பேர் வந்துவிடும் தருணத்தில்
யாராவதொருவர்
தயங்கிக்
கடைசியாய் உட்கார
நேர்ந்துவிடுகிறது
அதில்.

❁



## மரணக்குழி

வந்து நிற்கிறது அந்தகார இருள்
மை பூசிய திசைகளின் முகங்களைப்
பிரித்தறிய இனிச் சாத்தியமில்லை
இயக்கமெல்லாம் மோதல்
எதுவுமறியாக் குழந்தையின் கதறலோ
வெறும் எதிரொலி
சூன்யம் உதிர்க்கும் குரல்கள்
வெளவால் இறக்கைகள் பிய்த்துத் தின்னப்
பரபரக்கும் கைகளெங்கும் உதிரச் சொட்டல்
முகம் திரும்பும் புறமிருந்தெல்லாம்
மோதிக் கிழிக்கும் முள் காயங்கள்
திரளும் அடர்த்தியின் நசுக்கல்
லேசாக்கி ஊதித் தள்ளி விளையாட்டு
எதன் கையில் எவ்விடத்தில்
காலெடுக்க வழியில்லை
மரணக்குழி எதிரில்

ஒளி தொட்டு வரும்
சுட்டு விரலொன்று தாருங்கள்
இல்லை
குழி மூடிப் போக
மண் தள்ள வாருங்கள்.

❁

## அம்மாவின் ரேகை

அம்மாவிடம்
ரேகை வாங்கும் சந்தர்ப்பங்கள் கூடுகின்றன
எழுத்துப் பழக வற்புறுத்தி
விரல்களில் பேனா திணித்தபோதில்
களைக்கொத்தாய்ப் பற்றித்
தாளில் இறக்கி விட்டது
பின்
பேனா பிடிக்கும் ஐவேசு எனக்கில்லையென
கண்ணீருடன் மறுத்துப் போயிற்று
தேவையென்று சொன்னால்போதும்
எதற்கென்று கேட்காமல்
கட்டை விரல்கள் இரண்டையும்
தேய்த்துக் கழுவிக்கொண்டு வரும்
மை தடவும்போது
பெரிய அதிகாரியாய் என்னைப் பாவித்துக்
கூசிச் சிரிக்கும்
தாளில் உருட்டும் ஒவ்வொரு முறையும்
வெவ்வேறு வடிவமாகிறது
அம்மாவின் ரேகை
சிற்றுருளை
அகண்ட வரப்பு
காம்பற்ற மண்வெட்டி
வெட்டுப்பட்ட அடிமரம்...
எல்லாவற்றிலும் ஓர் ஒற்றுமை
வரிகள் சிதைந்து
தழும்புகள் நிறைந்த ரேகை.



## உன்னறை

உன் பொருள்களை எல்லாம்
சேகரித்து வந்து காற்றுத் திடலான
என் அறையை நிரப்பினேன்
எதை எவ்விதம் பயன்படுத்தினாயென அறியேன்
எதை எவ்விதம் பயன்படுத்துவது எனவும் அறியேன்
உன் விரல் பதிவுகளின் பொருட்டு
அவை என்னுடனே இருக்க விரும்பினேன்
அறை முழுக்க வெப்பம் பரவி
பொருள்கள் கூடிப்பேசிச் சிரிக்க
நள்ளிரவுத் தூக்கம் தொலைத்தேன்
ஒன்று, உன்னைப் போல் உதடு சுடித்துக் காட்டிற்று
மற்றொன்று, நீயாகிப் பல் நெரித்தது
ஒன்று, உன்னைப்போல் கால் எம்பி நடந்தது
மற்றொன்று, நீயாகி உற்று நோக்கிற்று
ஒன்று, உன்னைப்போல் ஆடித் துவண்டது
மற்றொன்று, நீயாகி மேலே மோதிற்று
எங்கும் உன் அன்பின் சாயலில்லை
எதிலும் உன் நெகிழ்வின் தருணமில்லை
அறையை உனக்கென விட்டுவிட்டு
வெளியேறுவதைத் தவிர
எனக்கு வேறு வழியுமில்லை.

## கண்ணாமூச்சி

நீங்கள் என்னை ஒருபோதும் பார்த்ததில்லை
நீங்கள் வரும்போதெல்லாம்
நான் ஒளிந்துகொள்கிறேன்
ஒளியும் இடங்களை நீங்கள் எளிதாகக்
கண்டுபிடித்திருக்க முடியும்
நீங்கள் தலையையும் முகத்தையும்
சிராக்கிக்கொள்ளும்
கண்ணாடிக்குப் பின்னால் நின்றிருப்பேன்
சிலசமயம்
நீங்கள் அமர்ந்திருக்கும்
நீண்ட இருக்கையின் அடியிருளில்
வாய் பொத்திப் படுத்துக்கிடப்பேன்
நீங்கள் மலரச் சிரித்து
சுற்றியெங்கும் கண்ணோட்டும்போது
குழந்தையின் சேகரிப்புப் பெட்டிக்குள்
காலுடைந்த பொம்மையெனக் குறுகி அமர்ந்திருப்பேன்
சிலசமயம்
காற்றில் பறக்கும் உங்கள் ஆடையின்
எஞ்சிய பகுதியில்தான் ஒளிந்திருப்பேன்
எனினும்
ஒருபோதும் உங்களால் கண்டுபிடிக்க முடிந்ததில்லை
என்னாலும்
ஒளிந்துகொள்ளாமலிருக்க முடியவில்லை.



## வீட்டைத் தொலைத்தல்

எப்போதும் வீட்டிலேயே இருக்கிறேன்

வெளியே செல்லும்போது
காற்று முகத்திலடிக்கிறது
கொடியில் காயும் துணியாய்

வீட்டின் குரல்கள் ஓய்வற்று
எங்கும் ஒலித்துக்கொண்டேயிருக்கின்றன

மின்விசிறியின் எல்லைக்குள்ளேயே
கைகள் விரிகின்றன

சுவர்களில் மோதிமோதிக்
கால்கள் திரும்புகின்றன

வெளிச்சம் கூடும்போதெல்லாம்
கண்கள் கிலிகொள்கின்றன

வீடு என்னைத் தாங்கியிருக்கவில்லை
எப்போதும் வீட்டை நானே சுமக்கிறேன்

அசௌகரியமான வீட்டின்
குரல்வளையைப் பிடித்தெடுத்து
அருவி கொட்டும்
மலையுச்சி ஒன்றிலிருந்து
வீசியெறிந்துவிட்டு வந்தேன்
ஊர்ந்து நெளிந்து பரிதாப முகத்தோடு
அடிவாரத்தில் வந்து
என்னுள் சேர்ந்தேறிக்கொண்டது

வீட்டைத் தொலைக்க இயலா
துர்பாக்கியசாலி நான்.

## மழை

மழை பெய்துகொண்டேயிருக்கிறது

மேடுகள் பள்ளங்களாகிவிட்டன
மண்முகமே தெரியவில்லை

காலிப் பாத்திரங்கள் எல்லாம் நிரம்பி
வெகுநேரமாயிற்று
சுவர்கள் அழுது கசிகின்றன

நனைந்த பறவைகள் நனைந்த மரங்களில்
நனைகின்றன
நோய்முகம் படிந்து விலங்குகள் கதறுகின்றன
செடிகள் அழுகி விழுகின்றன

கூக்குரல் அப்பி
இரவு நசநசத்துக் கிடக்கிறது

மழை பெய்துகொண்டேயிருக்கிறது
கிழட்டு நச்சரிப்பாய்.



## மழைக்காலத்து நிலா

மழைக்காலத்து நிலாவைப்
பெரும்பாலும் பார்க்க முடிவதில்லை

மேகத்தை எடுத்துப் போர்த்திக்
குளிருக்கு அடக்கமாய்
வானின் ஏதோ மூலையில்
சுருண்டு கிடக்கக்கூடும்

குழந்தைகளின் அல்லது தேவதைகளின்
கனவுகளில் ஓரமுகம் காட்ட
இறங்கிப் போயிருக்கலாம்

பூமி மூடிய நீரில் பரவசமாகித்
தன்னந்தனியே
நனைந்து மிதக்க
வனாந்திரப் பாழி தேடிச் சென்றிருக்கலாம்

காணாதபோதும் மயக்கமூட்டுகிறது
மழைக்காலத்து நிலா.

## ஒரு மின்னல்

சமதரையிலிருந்து
மூன்றடி உயர்த்தித்தான் கட்டினேன்

சுவர்களில் பறவைகள்
இட்டு வைக்கும் எச்சங்களைத்
தினமும் துடைத்து அள்ளுகிறேன்

சிறுமழை பெய்யினும்
தேங்கும் நீரில் வீடு தெப்பம்

எல்லாப்புறமும்
பசும்பாசிக் கொடிகள் ஏறுகின்றன

கிறுக்கல் வடிவ நீர்ப்பூச்சிகள்
எப்போதும் வீட்டையே சுற்றுகின்றன

இரவெல்லாம்
தவளைகள் கத்தித் தொலைக்கின்றன

இன்று அதிகாலை
கதவைத் திறந்தபோது
வாசற்படியில் தலைவைத்துச்
சுகமாய்த் தூங்கிக்கொண்டிருந்தது
அந்தப் பாம்பு

சலனத்தில்
அது ஒரு மின்னலெனச்
சற்றே புரண்டு படுக்கையில்
எனக்குப் புரிந்தது
அதன் வீட்டுக்குள் எனது வீடு.

●



## சாமந்தியும் செவ்வந்தியும்

சின்ன வயதில்
கோழிக்குஞ்சொன்று வளர்த்தேன்

மஞ்சள் நிறமாயிருந்தது
சாமந்தி என்று பெயரிட்டேன்

என் தட்டின் மீதுட்கார்ந்து
ஒரு பக்கம் அது உண்ணும்

என் மடிக்குள் குறுகித்
தூக்கம் போடும்

மாலை நேரமானால்
என் தோளில் ஏறிக்கொள்ளும்
கரையான் பொறுக்கப் போவோம்

வெட்டவெளியில் திரியாமல்
செடிகொடிகளுக்குள் இரைதேடும்படி
அறிவுரை சொல்வேன்

சொல்பேச்சு கேட்காத கோபத்தில்
கூண்டுக்குள்ளும் அடைப்பேன்

என் சுட்டுவிரலை உயர்த்தி
அதன்மீது சாமந்தியை நிற்கப் பழக்குவதே
எங்கள் விளையாட்டு

கால்களை வைக்கத் தடுமாறிக்
கீழே விழும்போது
என் கைகள் விரிந்துகொள்ளும்

ஒருசமயம்
சுட்டுவிரல் மீதிருந்து
இறகை லேசாக விரித்து
வாசல்வெளியில் போயிறங்கியது

திரும்பியே பார்க்கவில்லை
இனிய கனவொன்று
சுவடற்றுத் தேய்வதைப்போல்
ஓடி மறைந்தது

அதன்பின்
அதே சின்ன வயதில்
இன்னொரு கோழிக்குஞ்சு வளர்த்தேன்

சிவப்பு நிறமாயிருந்தது
செவ்வந்தி என்று பெயரிட்டேன்...



## நிஜம்

அப்போது நீ
உனது காதலை நிஜமாகவே
எனக்கு வழங்கியிருந்தாய்

ஒரு வளையமாய்ச் சூழ்ந்து
உனது காதல் பாதுகாப்பளித்தது

நிஜமாக நான் சிரித்தேன்
என் கண்ணீர் நிஜமாகச் சுட்டது
சொற்கள் நிர்வாணமாய்ப் பிறந்தன

மலையுச்சியின் பரிசுத்தம் நிரம்பிய
எனது செயல்களைக் காட்சிக்கு வைத்திருந்தேன்

எனக்கு வெளியே இயக்கம்கொண்டிருந்த
எல்லாப் பொருள்களின் மீதும்கூட
நிஜத்தின் முத்திரையைப்
பதித்துக்கொண்டிருந்தேன்

83131
031, INP;N
P07

அப்போது நீ
உனது காதலைத்
துளித்துளியாய்
உருவி எடுத்துக்கொண்டிருந்தாய்
நிஜமாகவே நானறியாமல்.

மாவட்ட மைய நூலகம், திருவண்ணாமலை.